**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 147/2024**

**Deposition of P.W.** 7

Name : திரு. ராஜசுந்தர்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:11.03.2026

A1, A2 absent. Petition filed and allowed

<u>முதல் விசாரணை</u>–

நான் தற்போது தர்மபுரி மாவட்டம், பாலக்கோடு உட்கோட்ட காவல்துணைகண்காணிப்பாளராக பணியாற்றி வருகிறேன்.இதற்கு முன்னர் தக்கலை காவல்நிலையத்தில் பணியாற்றிய போது தக்கலை காவல்நிலைய குற்ற எண். 210/2016 பிரிவுகள் 3(i) தமிழ்நாடு பொதுசொத்துக்களை சேதப்படுத்துவதை தடுக்கும் சட்டபடியான வழக்கை 11,03,2016ம் தேதி வழக்கு கோப்பை எனது விசாரணைக்கு எடுத்து கொண்டுஅன்றயை தினம் 18.30 மணிக்கு சம்பவ இடம் சென்றும் சாட்சிகளான சிவராம், ஐயப்பன் என்பவர்கள் முன்னிலையில் மாதிரி வரைபடமும், பார்வை மகஜரும் தயார் செய்தேன். அந்த மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4. பின்னர் சம்பவ இடத்தில் அத்தாட்சி தயார் செய்து பேரூந்தின் கண்ணாடியை உடைக்க பயன்படுத்திய கருங்கல் ஒன்றை

.2.

கைப்பற்றினேன். வழக்கு சொத்தை படிவம் 91ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் அந்த படிவம் 95 அ.சா.ஆ.5, கருங்கல் சா.பொ.1 ஆகும். சாட்சிகளான விஷ்னு, சிபு, சிவராம், ஐயப்பன் ஆகியவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 13.03.2016ம் தேதி காலை 10.00 மணிக்கு மேட்டுக்கடை சந்திப்பில் வைத்து வழக்கின் எதிரிகளை கைது செய்து சாட்சிகளான காட்வின், ஜெரோம் ஆகியவர்கள் முன்னிலையில் எவ்வித அச்சுசுறுத்தலுமின்றி உச்ச நீதிமன்ற கட்டளைகளை நிறைவேற்றி விசாரித்த போது 1வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து அதன் படி அவர் ஆஜர் செய்த TN 75 R 0088 என்ற கறுப்பு கலர் பல்சர் வாகனத்தை கைப்பற்றி படிவம் 91ன் மூலம் வழக்குச் சொத்தையும், எதிரிகளையும் நீதிமன்ற காவலுக்கு அனுப்பினேன். படிவம் 91 அ.சா.ஆ.7, பல்சர் இருசக்கர வாகனம் TN 75 R 0088 சா.பொ.2, பின்னர் சாட்சிகள் காட்வின், ஜெரோம் ஆகியவர்களையும் விசாரித்து வழக்கு பதிவு செய்த தலைமைக்காவலரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 31.03.2016ம் தேதி விசாரணை முடித்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

பொய்யான புகாரின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் சான்று பொருட்கள் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்கும், எதிரிக்கும் சம்மந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல.